A

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]

Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 45 ]

Total No. of Questions : 45 ]

**CCE RF**
**CCE RR**

Question Paper Serial No. **101**

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T**

**Code No. : 10-T**

**ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು**

## Subject : First Language — TAMIL

**( ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ & ಪುನರಾವರ್ತಿತ ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Fresh & Regular Repeater )**

ದಿನಾಂಕ : 28. 03. 2022 ] [ Date : 28. 03. 2022

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-45 ರವರೆಗೆ ] [ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 45-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக :** **6 × 1 = 6**

1. செய்யுளில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வருவது

   (A) எதுகை

   (B) மோனை

   (C) இயைபு

   (D) முரண்

2. படித்த புத்தகம் படித்த என்பது -

   (A) திரிசொல்

   (B) பெயரெச்சம்

   (C) வினையெச்சம்

   (D) வினைச்சொல்

3. காஞ்சிபுரம் வாங்கினான்

   (A) பொருளாகு பெயர்

   (B) இடவாகு பெயர்

   (C) காலவாகு பெயர்

   (D) சினையாகு பெயர்

4. நனியுண்டு நனி என்பது -

(A) பெயர்ச்சொல்

(B) வினைச்சொல்

(C) இடைச்சொல்

(D) உரிச்சொல்

5. இரண்டு சீர்களைக் கொண்டது

(A) குறளடி

(B) சிந்தடி

(C) அளவடி

(D) நெடிலடி

6. முருகன் எழுதினான்

(A) நிகழ்காலம்

(B) இறந்தகாலம்

(C) எதிர்காலம்

(D) வருங்காலம்

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக :**

**4 × 1 = 4**

7. தூறு என்பது புதர்;

   புதிர் என்பது : ........................... .

8. காகம் கரையும்;

   சேவல் : ........................... .

9. தென்னங்கீற்று;

   பனை : ........................... .

10. அகவலோசை உடையது ஆசிரியப்பா;

    செப்பலோசை உடையது : ........................... .

**III. ஒரு தொடரில் விடை தருக :** **7 × 1 = 7**

11. பேராறு திரவியங்களை அள்ளி வருவதற்கான உவமை யாது ?

12. நீ எத்தகைய எண்ணத்தைக் கூடு என்கிறார் நாமக்கல் கவிஞர் ?

13. யாரைக் கண்டதும் நிலம் என்னும் நல்லாள் நகுவாள்?

14. பெண்கள் எவை போயின என்று கும்மியடித்தனர் ?

15. திரு.வி.க. காற்றாடிகள் என்று சொல்லுகின்ற இருவரைக் குறிப்பிடுக.

16. இளம்பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இருவகையினர் யாவர்?

17. பம்பனது சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக.

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 10 × 2 = 20**

18. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது ?

19. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்புகள் யாவை ?

20. பிரமன் இராவணனுக்குக் கொடுத்த சாபம் யாது ?

21. காளைக்குச் சொல்வது போல் மக்களுக்குப் பட்டுக் கோட்டையார் கூறுவது என்ன ?

22. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு என்ன?

23. நீதிச்சாரம் என்ற நூல் பற்றி எழுதுக.

24. கிராமத்தின் பரம்பரைத் தொழிலாளர்கள் ஏன் கிராமத்தைக் கைவிட்டனர் ?

25. அடுக்குத் தொடரைச் சான்றுடன் விளக்குக.

26. அடி என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

27. உரிச்சொல் என்றால் என்ன ? எ.கா. தருக.

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : 4 × 3 = 12**

28. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை ?

29. தாய், தந்தை, கொல்லன், அரசன், மகன் செய்ய வேண்டிய கடமைகளைப் பொன்முடியார் வழிநின்று விளக்குக.

30. சேதுப்பிள்ளையவர்கள் 'இவர்கள் கைவண்ணம் இங்கு கண்டோம்' என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விளக்குக.

31. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரும் ? அதன் விளைவு யாது ?

**VI. குறிப்பு வரைக : 2 × 3 = 6**

32. பழமொழி நானூறு

33. கவிஞர் வைரமுத்து

**VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக :** **1 × 3 = 3**

34. வேற்றுமை அணி

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :** **3 × 3 = 9**

35. ''பால் வார்த்தாலும்

விஷம் குறைக்காது பாம்பு''

36. ''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்''.

37. ''பாவம் கொஞ்ச நேரமாவது அவர்கள் அயர்ந்து தூங்கட்டும்''.

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக :** **1 × 3 = 3**

38. ''எறும்பு ஊர கல்லும் தேயும்''.

*அல்லது*

''இறைக்க இறைக்க ஊறும் கிணறு''.

**X. அடிபிறழாமல் எழுதுக :** **1 × 4 = 4**

39. ''இனிமைத் தமிழ் மொழி'' எனவரும் பாடல்

*அல்லது*

''முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்''.

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக :** **2 × 4 = 8**

40. நாம் இயற்கையின் சமநிலையை எவ்வாறு கெடுக்கின்றோம்?

41. தமிழ் இதழ்களும் விடுகதைகளும் குறித்து பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியம் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

*அல்லது*

இலட்சியம் பற்றி வைரமுத்து கூறும் கருத்துக்களைச் சுருக்கி வரைக.

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுக :** **1 × 4 = 4**

42. ''சுழன்றும் ஏர்ப் பின்னதுலகம் அதனால்

உழந்தும் உழவே தலை

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்''.

*அல்லது*

''உச்சி மலையிலே ஊறும் அருவிகள்

ஒரே வழியிலே கலக்குது

ஒற்றுமையில்லா மனித குலம்

உயர்வும் தாழ்வும் வளர்க்குது''.

**XIII.** **பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக :**

**$(2 \times 2 = 4)$ $1 \times 4 = 4$**

பாகவதமேள : பாடலும், ஆடலும் இணைந்த கூத்தினை 'பாகவத மேள' என்பர். இக் கூத்தின் தலைவன் 'பாகவதன்' என்னும் பாட்டுக்காரன் ஆவான். ஆட்டக்காரர்கள் காலில் சலங்கையும் மார்பில் மாலையும் அணிந்திருப்பர். 'கோடங்கி' என்பவன் நகைச்சுவைப் பாத்திரம் தாங்குகின்றான். இவன் தாடி, மீசை, பெரிய வயிறு, கூம்பிய தொப்பி, அதன் நடுவே பெரிய நாமம். சிவந்த ஆடை, இடுப்பில் மணிச்சரம் முதலிய ஒப்பனைகளோடு காட்சி தருகிறான். மக்கள் கோடங்கி வேடக்காரனை தெய்வமாகக் கருதி அவன்

பாதங்களுக்கு வழிபாடு செய்வர். பாலலீலா, தசாவதாரம், இராமாயணம், அனுமன்-கருடப்போர், முதலியவற்றை பாகவதன் பாடலாகப் பாட, எதிரே நிற்கும் ஆட்டக்காரர்கள் கூத்து வடிவில் ஆடுகின்றனர்.

வினாக்கள் :

43. a) ‘கோடங்கி’ என்பவனின் ஒப்பனை எவ்வாறு இருக்கும்?

b) பாகவதன் கூத்தில் எவற்றைப் பாடலாகப் பாடுவான்?

**XIV.** **மடல் எழுதுக :** **1 × 5 = 5**

44. இணைய வழியில் கல்வி கற்ற உன் அனுபவங்கள் குறித்து உன் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

*அல்லது*

நீ வாழும் பகுதியில் மருத்துவமனை வசதி செய்து தருமாறு நகராட்சி ஆணையருக்கு கடிதம் எழுதுக.

**XV.** **கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக:** **1 × 5 = 5**

45. ''இனிய வாழ்வும்; இயற்கை மருத்துவமும்''

*அல்லது*

''சமுதாய மாற்றத்தில் மாணவர் பங்கு''